**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.79 /2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | **P.W.1** |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ஞானசேகரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 26.03.2025.

முதல் விசாரணை

நான் தற்போது கோவை மாவட்டம் காரமடை வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு உடுமலை வனச்சரகத்தில் கரட்டுர் சுற்றில் வனக்காப்பாளராக 2021 ம் ஆண்டு பணியில் இருந்த போது தேதி மாதம் ஞாபகம் இல்லை. நானும் வன அலுவலர்கள் தேதி மாதம் ஞாபகம் இல்லை. வனவர் கோபாலகிருஷ்ணன், காட்டுப்பட்டி ஊர் பொது மக்கள் காட்டிற்குள் யானை தந்தம் காணவில்லை என்று சென்றோம். எதற்காக சாட்சியம் சொல்ல வந்தேன் மற்றும் எந்த வழக்கு என்று எனக்கு தெரியும். தந்தம் காணவில்லை என்று சென்றோம். காட்டுப்பட்டி பாறை இடுக்கில் இருந்தது. அது எந்த இடம் என்று எனக்கு தெரியாது. ஒரே ஒரு தந்தம் இருந்தது. தந்தம் இருந்த இடத்தில் எந்த அலுவல் பணியும் நான் செய்யவில்லை. தந்தத்தை எடுத்துக் கொண்டு வந்து வனத்துறை அலுவலகத்தில் ஆஜர் செய்தேன். யானை தந்தம் கிடைத்த இடத்தில் ஸ்தல மகஜர் நான் தயார் செய்தேன். யானை தந்தம் எடை மற்றும் கிலோ என்று நீளம் அகலம் மற்றும் சுற்றளவை டேப் மூலம் அளந்தோம். தந்தத்தின் மொத்த நீளம் 138 செண்டி மீட்டர் அளவு இருந்தது. சுற்றளவு 34 சென்டிமீட்டர் இருந்தது.

அதற்காக நான் ரிப்போர்ட் கொடுத்தேன். இந்த சம்பவம் நடந்து இரண்டு மூன்று நாட்களுக்கு கழித்து நானும் வனவர் கோபாலகிருஷ்ணன் என்பவரும் மற்றும் குழிப்பட்டி வனவர் மற்றும் பெயர் தெரியாத வனவர்கள் வந்தார்கள். குழிபபட்டி ஏரியாவில் உள்ள மக்களை விசாரித்து வந்தோம். பொது மக்களுக்கு எதுவும் தெரியாது என்று சொன்னார்கள். பொதுமக்களே வந்து எதிரிகள் தான் இதை செய்தார்கள் என்று கூறினார்கள். நாங்கள் அவர்களை பிடித்தோம். கைகாட்டி இடத்தில் அவர்களை பிடித்தோம். 2 பேர்கள் இருந்தார்கள். கைகாட்டி என்ற இடத்தில் இரண்டு பேர் இருந்தார்கள் இரண்டு பேரையும் கைது செய்தோம். ஒருவர் பெயர் வேலு மற்றொரு நபர் சின்னத்தங்கம். இருவரையும் கைது செய்தோம். வேலுவிடம் வாக்குமூலம் பெற்றோம். யானை தந்தம் கிடந்தது என்றும் நாங்கள் தான் எடுத்து வந்தோம் என்றும் கூறினார். ஒரு நபரிடம் தான் வாக்குமூலம் பெற்றோம். பின்னர் கோபாலகிருஷ்ணன் வனவர் சின்னத்தங்கத்திடம் வாக்குமூலம் பெற்றார். சாட்சி சொல்வதற்கு வரும் போது வழக்கு கையிருப்பு ஆவணங்களை நான் பார்க்கவில்லை. இனறு சாட்சி சொல்ல அழைப்பாணை பெற்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். வாக்குமூலம் பெற்ற பின் நீதிமன்றத்தில் எதிரிகளை ஆஜர் படுத்தினோம். சாட்சி மீண்டும் H நமுனா நான் தான் தயாரித்தேன் என்று கூறினார். H நமுனா வில் பிடித்த தந்தத்தை குறிப்பிட்டு எழுதியிருந்தார். மேற்கொண்டு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று கூறினார்.

சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் 29.08.2021 ம் தேதியன்று கரட்டுர் சுற்று சடையன் பாறை தடாகம் பகுதியில் நாங்கள் ரோந்து பணியில் இருந்த போது ஒரு ஆண் காட்டு யானை ஒன்று இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்தை அதை உடுமலை வனச்சரக அலுவலருக்கு நான் தெரிவித்தேன் என்றும் உடுமலை வனச்சராக அலுவலர் Flash ரிப்போர்ட் என்னும் முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு களப்பணியாளர்களுடன் நானும் அவர்களுடன் சென்று 30.08.2021 ஆம் தேதி அன்று காலை 11.00 மணியளவில் இறந்த யானையின் உடலை பிரேத பரிசோதனை செய்தார்கள் என்றும் அந்த சமயத்தில் யானையின் வலது புறம் பக்கவாட்டில் இடதுபுற தந்தம் வெட்டி எடுக்கப்பட்டு இருந்தது என்றும் மருத்துவர்கள் அந்த காட்டு யானை இறந்து நான்கு முதல் ஐந்து நாட்கள் வரை இருக்கலாம் என்று தெரிவித்தனர். மேலும் அந்த யானையை ஆய்வு செய்வதில் குண்டு துளைத்தற்கான எவ்வித தடயம் கிடைக்கப்பெறவில்லை என்றும் கூறினார்கள் அதன் பிறகு களப்பணியாளர்கள் ஊர் பொதுமக்கள் உதவியுடன் இடதுபுற பக்கவாட்டில்

விருப்பப்பட்டு வலது பக்க உள் தந்த பகுதியை வெட்டி எடுக்க முற்பட்ட நிலையில் 15 முதல் 18 எம்எம் அளவுள்ள குண்டு ஒன்றே கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அந்த குண்டானது யானையின் தோலில் ஐந்து 5mm அளவிற்கு பதிந்திருந்தது என்றும் ஆனால் அது புதிதாக சுடப்பட்டதற்கான தடயம் எதுவும் இல்லை என்றும், அந்த இடத்தில் கரட்டுர் பிரிவு வனவர் கோபாலகிருஷ்ணன் ஸ்தல மகசர் தயார் செய்தார் என்றும் அதற்கு ஆதரவாக நான் இருந்தேன் என்றும் அங்கு எடுக்கப்பட்ட ஆய்வு மாதிரிகளை வன உயிரின மேலாண்மை நிறுவனம் சென்னை தடய அறிவியல் ஆய்வகம், மயிலாப்பூர் கால்நடை மருத்துவக் கல்லூரி வேப்பேரி, வட்டார தடய அறிவியல் ஆய்வகம் கோயம்புத்தூர் ஆகிய ஆய்வகங்களுக்கு கனம் நீதிமன்றத்தின் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் திருடப்பட்ட ஒற்றை தந்தத்தையும் எதிரிகளையும் பிடிக்க துணை இயக்குனர் ஆனைமலை புலிகள் காப்பகம் உடுமலைப்பேட்டை அவர்களின் உத்தரவு பிரகாரம் திருப்பூர் வனக்கோட்ட உதவி வன பாதுகாவலர் கணேஷ்ராம் தலைமையிலும் தனபாலன் வனச்சரக அலுவலர் ஆகியோருடன் நானும் சிறப்பு குழுவில் சேர்க்கப்பட்டு தேடுதல் பணியில் இருந்தோம் என்றும் உடுமலைப்பேட்டை வனச்சரகம் கரட்டூர் பிரிவு உடைந்த பாலம் அருகில் சிறப்பு குழுவினராகிய நாங்கள் தணிக்கை செய்த போது மஞ்சள் மற்றும் வெள்ளை நிற சாக்கு பைகள் பாறை இடுக்கில் மறைத்து வைத்திருப்பதை கண்டுபிடித்து அதில் ஒற்றை தந்தம் இருந்தது என்றும் அந்த யானையின் சுற்றளவை சம்பவ இடத்தில் நான் ஸ்தல மகசர் தயார் செய்தேன் என்றும், அந்த ஸ்தலத்திற்கு வனவர் கோபாலகிருஷ்ணன் ஸ்தல மகஜர் தயார் செய்தார் என்றும் இதன் தொடர்பாக குற்றவாளிகளை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு 22.09.2021 ஆம் தேதி அன்று மாலை 5.00 மணி அளவில் உதவி வன பாதுகாவலர் தலைமையில் நானும் நல்லாறு சரக பகுதியில் நல்லாறு ஆற்றுப்பகுதியில் பாறை மீது அமர்ந்து இருந்தவர்களை சந்தேகப்பட்டு சுற்றி வளைத்து விசாரித்ததில் எதிரிகள் சின்ன தங்கம், வேலு ஆகிய இருவரும் பிடிபட்டார்கள் என்றும் மற்ற எதிரிகள் ஓடி விட்டனர் என்றும் எதிரிகளை விசாரித்த போது குழிப்பட்டி சேர்ந்த வெள்ளைச்சாமி மற்றும் திருமண் ஆகியோருடன் சேர்ந்து குற்றத்தை ஒப்புக் கொண்டனர் என்றும் சின்ன தங்கத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தை தனபாலன் என்பவர் பதிவு செய்தார் என்றும் வேலு என்பவரிடம் தளிப்பிரிவு வனவர் தங்கப்பிரகாஷ் பதிவு செய்தார் என்றும் வனவர் கோபாலகிருஷ்ணன் ஸ்தல மகஜர் மற்றும் ஸ்தல வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் நான் அந்த இடத்தில் H நமுனா தயார் செய்து மேல் நடவடிக்கைக்காக உடுமலைப்பேட்டை வனத்துறை அலுவலகம் கொண்டு வந்தோம் என்றும் எதிரிகளை

நீதிமன்ற காவலில் வைத்தோம் என்றும், வன பாதுகாப்பு அலுவலர் கணேஸ் ராம் அவர்களுக்கு உதவியாக இருந்தோம் என்றும் அவர் தயார் செய்த A நமுனாவிற்கு சரியான விவரங்களை கூறிவிட்டு தற்சமயம் ஸ்தல மகஜர் நான் தான் தயார் செய்தேன் என்றும் கைகாட்டி என்ற இடத்தில் எதிரிகளை கைது செய்தததாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றொரு வனவர் பதிவு செய்த நிலையில் நான் தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் தந்தம் கைப்பற்றப்பட்ட இடத்தை மாற்றி கூறியும் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் எனது முதல் விசாரணையில் கைகாட்டி என்று குறிப்பிட்டிருப்பது ஆழியார் கைகாட்டி என்றால் சரிதான். எதிரிகள் தங்களது வாகனமான டெம்போ 407 வந்து கொண்டிருக்கும்போது ஆழியார் கைகாட்டி என்ற இடத்தில் வைத்து கைது செய்தீர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட கைது தவறாக செய்யப்பட்டது என்று பொதுமக்கள் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் முன்பு முற்றுகையிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

<u>மறுவிசாரணை</u> இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.